## *25*

# விசுவாசத்தின் மூலமாக வெற்றி

## (11:30-40)

*எபிரெயருக்கு எழுதிய நிருபம் தோற்றகாலத்தில் யாருக்கு எழுதப்பட்டதோ, அந்தக் கிறிஸ்தவர்கள் பல பிரச்சனைகளைக் கொண்டிருந்தனர்: ஊக்கமிழந்த நிலை, அக்கறையின்மை மற்றும் விசுவாச விலக்கத்தின் அபாயம்கூட. அவர்களின் பிரச்சனைகளுக்கு பதிலாக இருந்தது விசுவாசம். எபிரெயர் 11ல் விவரிக்கப்பட்ட வகையிலான விசுவாசம் என்பதே அவர்கள் புரிந்துகொள்ள வேண்டிய அவசியமாயிருந்தது. இந்தப் படிப்பு அந்த அதிகாரத்தின் 30ம் வசனத்துடன் தொடங்குகிறது. நான் இந்தப்பாடத்தை, "விசுவாசத்தின் மூலமாக வெற்றி" என்று அழைக்கிறேன். இவ்வசனப் பகுதி இந்தப் புத்தகத்தின் உச்சக்காட்சியை நோக்கி எவ்வாறு கட்டி எழும்புகிறது என்பதை நீங்கள் காண வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.*

## *... விசுவாசத்தின் வீரர்கள் ... (11:30, 31)*

***எரிகோவின் மதில்கள் (11:30)***

*இங்கு நாம், விசுவாசத்தின் அதிக விபரமான இன்னும் இரண்டு உதாரணங்களைக் காணுகிறோம். முதலாவது எரிகோவின் மதில்கள் எவ்வாறு வீழ்ந்தன என்பதாக உள்ளது. 30ம் வசனத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும், யூதர்களின் மக்களினம் பற்றிய வரலாற்றின் உருவகங்களுடன், அவர்களின் மனங்களில் பொங்கிப் பெருக்கெடுத்திருக்கும் நகரத்தைத் தோல்வி அடையச் செய்வதில் தேவனுடைய கட்டளைகள் (யோசுவா 6:2-5) விசுவாசத்தைச் செயல்படுத்துதலை உள்ளடக்கியிருந்தன.*

***ராகாப் (11:31)***

*ராகாப் என்பவளைப் பற்றியது இரண்டாவது விவரிப்பாக உள்ளது (காண்க யோசுவா 2:9-11). இது ஒரு வழக்கமற்ற விவரிப்பாக நம்மைத் தாக்குகிறது: ராகாப் ஒரு பெண்ணாக இருந்தாள்[1] ... தேவபக்தியற்ற புறதெய்வ வணக்கப் பெண்ணாக இருந்தாள். அவள் குறிப்பிடப்பட்டது ஏன்? விசுவாசத்தின் மூலமாக அவள் வெற்றியை ஆதாயப்படுத்தி கொண்டாள் (கவனிக்கவும் யோசுவா 2:4-21). அவள் அழிவின் மீது வெற்றியை ஆதாயப்படுத்திக் கொண்டாள் (யோசுவா 6:22-25). எல்லாவற்றிற்கும் மேலாக அவள், புறதெய்வ வணக்கப் பின்னணியின் மீது வெற்றியை ஆதாயப்படுத்திக் கொண்டாள் (காண்க மத்தேயு 1:5)*

# *"... வெற்றியை ஆதாயப்படுத்திக்கொண்டவர்கள் ..." (11:32-36)*

***விசுவாசத்தின் மற்ற உதாரணங்கள் (11:32, 35, 36)***

*32ம் வசனம், வெற்றியை ஆதாயப்படுத்திக்கொண்டவர்களான விசுவாசத்தின் மற்ற வீரர்களைச் சுருக்கமாகப் பட்டியல் இடுகிறது. இவர்கள் ஒவ்வொருவரும் விசுவாசத்தின் மூலமாகவே வெற்றியை ஆதாயப்படுத்திக் கொண்டனர்.*

*கிதியோன்: தேவனுடைய திட்டத்தின் மீது கொண்ட விசுவாசத்தின் காரணமாக, மீதியானியர்களுடன் போரிட முந்நூறு இஸ்ரவேல் வீரர்கள் மாத்திரம் வைக்கப்பட்டனர் (நியாயாதிபதிகள் 7).*

*பாராக்: இஸ்ரவேல் மக்கள் தேவன்மீது விசுவாசம் கொண்டிருந்த காரணத்தினால், அசீரியர்கள் தோற்கடிக்கப் பட்டனர் (நியாயாதிபதிகள் 4).*

*சிம்சோன் (நியாயாதிபதிகள் 13-16): இவர் தேவன்மீது தாம் கொண்டிருந்த விசுவாசத்தின் மூலமாக, பெலிஸ்தர்களுக்கு எதிராக மாபெரும் வல்லமையை செயல்விளக்கப் படுத்தினார்.*

*யெப்தா: இவர் தேவனுடைய மக்களுக்காக அம்மோனியர்கள் மீது மாபெரும் வெற்றியை அடைந்தார் (நியாயாதிபதிகள் 11).*

*தாவீது: இவர் ஒரு பூரணப்பட்ட மனிதர் அல்ல, ஆனால் இவர் விசுவாசத்தின் மனிதராக இருந்தார் (காண்க சங்கீதம் 23).*

*சாமுவேல் (1 சாமுவேல்): இவர் பழைய ஏற்பாட்டின் பெரிய மனிதர்களில் ஒருவராய் இருந்தார் மற்றும் விசுவாசத்தில் பெரிய மனிதராய் இருந்தார்.*

*தீர்க்கதரிசிகள்: ஏசாயா, தானியேல், ஏரெமியா, சகரியா, எலியா மற்றும் எலிசா ஆகியோரை நினைத்துப் பாருங்கள்.*

*முடிவில், இந்த அதிகாரம் "வேறு சிலரைக்" குறிப்பிடுகிறது (வசனங்கள் 35, 36).[2] வீரர்களைக் கொண்டிருப்பது முக்கியமானதாக இருக்கிறது. உங்களுடைய வீரர்கள் யார்?*

***வெற்றியின் உதாரணங்கள் (11:33-35அ)***

*அடுத்ததாக நாம், விசுவாசத்தினால் வெற்றியை ஆதாயப்படுத்திக்கொண்ட குறிப்பிட்ட உதாரணங்களைப் பற்றி வாசிக்கிறோம்.*

*"விசுவாசத்தினாலே, அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள்": தாவீது பெலிஸ்தர்களை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தினார்; கிதியோன் மீதியானியர்களை வெற்றிகொண்டார்.*

*"நீதியை [அல்லது நியாயத்தை] நடப்பித்தார்கள்": அவர்கள் சரியானவற்றைச் செய்தனர்; அத்துடன் கூடுதலாக, பட்டியல் இடப்பட்டுள்ளவர்களில் சிலர் நியாயமான சிந்தைகொண்ட நியாயாதிபதிகளாகப் பணிசெய்தனர்.*

*"வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள்": தாவீதிற்கு மேசியாத்துவ வாக்குத்தத்தம் தரப்பட்டது (2 சாமுவேல் 7:12-16), மற்றும் தானியேல் (எரேமியா முன்னுரைத்திருந்த, எழுபது ஆண்டுகள் அடிமைத்தளையின் முடிவு போன்ற) தேவனுடைய வாக்குத்தத்தங்கள் பலவற்றின் நிறைவேற்றத்தைக் கண்டார்.*

*''சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்'': தாவீதும் சிம்சோனும் சிங்கங்களைக் கொன்றனர், ஆனால் நாம் விசேஷமாக தானியேலைப் பற்றி நினைக்கிறோம் (காண்க தானியேல் 6:23).*

*"அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள்": மூன்று எபிரெய இளைஞர்கள் அக்கினிச் சூளையினால் புண்படாதிருந்தனர் (தானியேல் 3).*

*"பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள்": தாவீது சவுலின் பட்டயத்திற்குத் தப்பினார்; எலியா ஆகாபின் பட்டயத்திற்குத் தப்பினார்.*

*''பலவீனத்தில் பலன்கொண்டார்கள்'': தாவீது கோலியத்தைத் தோல்வியடையச் செய்தபோது, அவர் ஒரு ஆடுமேய்க்கும் பையனாக இருந்தார்; கிதியோன் என்ற நியாயாதிபதி தமது தந்தையின் வீட்டில் எல்லாரிலும் சிறியவராக இருந்தார் (நியாயாதிபதிகள் 6:15).*

*''யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்": பட்டியல் இடப்பட்டவர்களில் பலர் மாபெரும் போர் வெற்றிகளைப் பெற்றனர்.*

*"ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்": சரெப்தா ஊர் விதவை மற்றும் சூனேமித்தியப் பெண் ஆகிய இரண்டு பெண்களைப் பற்றி நாம் அறிந்திருக்கிறோம்.*

*"கிறிஸ்தவம் என்பது அதைப்போன்று - ஒன்றுக்குப் பின் இன்னொரு வெற்றி என்பதாக - மன எழுச்சியுள்ளதாக இருக்கும் என்று நாம் நினைத்தோம், ஆனால் முன்னைக் காட்டிலும் இப்போது நாம் அதிக உபத்திரவங்களைப் பெறுகிறோம்!" என்று யூதக்கிறிஸ்தவர்கள் பதிலுரை அளித்ததை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. பொறுங்கள்! இந்தக் கலந்துரையாடல் ஒரு முக்கியமான சத்தியத்திற்கு வழிநடத்துகிறது.*

## *"... பாதகமான சூழ்நிலைகளின் மத்தியிலும்கூட ..." (11:35ஆ-39அ)*

**பாதகமான சூழ்நிலை**

*35 முதல் 38 வரையிலான வசனங்களில், "வெற்றி" என்பது துன்பம் இல்லாமை என்று அர்த்தப் படுத்துவது இல்லை என்பது தெளிவாகிறது. பாதகமான சூழ்நிலைகளின் மத்தியிலும்கூட, விசுவாச வீரர்கள் வெற்றியை ஆதாயப்படுத்திக் கொண்டனர் என்பதை நிலைநாட்ட எழுத்தாளர் விரும்பினார்.*

*ஒரு சில தனிநபர்கள் மரித்தோரில் இருந்து எழுப்பப் பட்டிருந்தனர் (வசனம் 35அ), ஆனால் எபிரெயர் 11ன் வீரர்கள் அவ்வாறு இருக்கவில்லை. மாறாக அவர்களில் சிலர், ''விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்'' (வசனம் 35ஆ); அவர்கள் தங்கள் விசுவாசத்தை மறுதலித்திருந்தால் விடுவிக்கப் பட்டிருக்கலாம். ஒருவர் தேவனுக்கு உண்மையுள்ளவராக நிலைத்திருந்தால், அதுவே வெற்றியாக உள்ளது. அவர்கள் ''வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு'' உண்மையுடன் நிலைத்திருந்தனர் (வசனம் 35இ).*

*"வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்'' (வசனம் 36); இதற்கு எரேமியா ஒரு உதாரணமாக*

இருக்கிறார். சகரியாவைப் போன்று சிலர் "கல்லெறியுண்டார்கள்" (வசனம் 37அ). "வாளால் அறுப்புண்டார்கள்" (வசனம் 37ஆ); பாரம்பரிய வரலாற்றின்படி, ஏசாயா இரண்டு மரப்பலகைகளுக்கு இடையில் வைத்துக் கட்டப்பட்டுப் பின்பு வாளால் இரண்டாக அறுக்கப்பட்டார். அவர்கள் "பரீட்சைபார்க்கப்பட்டார்கள்" (வசனம் 37இ) மற்றும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் துன்பங்கள் உண்டாயிருந்தன. எல்லாரும் "பட்டயக்கருக்குக்குத் தப்பவில்லை" (வசனம் 34); சிலர் "பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள்" (வசனம் 37அ). அவர்கள் "குறைவையும், உபத்திரவத்தையும், துன்பத்தையும் அனுபவித்தார்கள்" (வசனம் 37இ), அவர்களுக்கு ஒன்றுமில்லாததுபோல், அவர்கள் ஒன்றுமில்லாதவர்கள்போல், இங்கும் அங்கும் "சிதறுண்டு அலைந்தார்கள்" (வசனம் 38ஆ). ஆயினும், "உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்காத மனிதர்களாய்" இருந்தனர் (வசனம் 38அ)!

**வெற்றி**

இந்த மக்கள் வெற்றிபெற்றவர்களாக இருந்தனரா? ஆம்! 39ம் வசனத்தின் முதல் பகுதியில், "இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும்" என்றும் வாசிக்கிறோம். இவர்கள் தேவனால் அங்கீகரிக்கப் பட்டிருந்தனர். இதைக் காட்டிலும் மாபெரும் வெற்றி வேறெதுவும் இல்லை!

## நாமும் கூட அவ்வாறு இருக்க முடியும் ... (11:39ஆ, 40)

நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த எழுத்தாளர் தயாராக இருந்தார். அவர்களும்கூட விசுவாசத்தின் வீரர்களாக இருக்க முடியும். பாதகமான சூழ்நிலைகளில் மத்தியிலும்கூட வெற்றியை ஆதாயப்படுத்திக் கொள்ளமுடியும் என்பதைத் தமது வாசகர்கள் அறிய வேண்டும் என்று விரும்பினார். இதை அதிகமாக நமக்குச் சொந்தமானதாக ஆக்கிக்கொள்வதற்கு, இதை பின்வருமாறு சொற்றொடராக்க என்னை அனுமதியுங்கள்: *நாமும்கூட*, பாதகமான சூழ்நிலைகளின் மத்தியிலும் வெற்றியை ஆதாயப்படுத்திக் கொள்ளும் விசுவாச வீரர்களாக *முடியும்*. ஏன்?

(1) ஏனென்றால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவற்றை நாம் பெற்றிருக்கிறோம். பழைய ஏற்பாட்டின் விசுவாச வீரர்கள் "வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்" (வசனம் 39ஆ); அவர்கள் இயேசு கிறிஸ்து என்ற மேசியாவின் வருகையைப் பார்க்கவில்லை. இருப்பினும் எபிரெயக் கிறிஸ்தவர்கள் அவரது [இயேசு கிறிஸ்துவின்] போதனையைப் பெற்றிருந்தனர் - நாமும் அவ்வாறே பெற்றிருக்கிறோம்.

(2) ஏனென்றால் நாம், "விசேஷித்த நன்மையானதொன்றை" பெற்றிருக்கிறோம் (வசனம் 40அ). நாம் மேன்மையான பலியை, மேன்மையான உடன்படிக்கையை, மேன்மையான நம்பிக்கையை மற்றும் எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் உள்ள "மேன்மையான" மற்ற எல்லா விஷயங்களையும் பெற்றிருக்கிறோம்.

(3) ஏனென்றால், பழைய ஏற்பாட்டின் விசுவாச வீரர்கள், தேவனுடைய

திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றின் முற்றான நிறைவேற்றம் குறித்து, வீணாக மரிக்கவில்லை என்று நமக்கு உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. 40ம் வசனத்தின் முதல் பகுதி, "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு" என்று கூறுகிறது. இது அவர்கள் இரட்சிக்கப்பட்டிருந்த நிலையைக் குறிப்பிடுவது இல்லை, ஆனால் அதற்கு மாறாக, அவர்கள் தொடங்கியிருந்ததை *நிறைவு செய்தலைக்* குறிப்பிடுகிறது. இவ்வசனப் பகுதியில் "பூரணராகுதல்" என்பது முடிக்கப்பட்டதாக அல்லது *நிறைவடையப் பட்டதாக உள்ளதைக்* குறிப்பதாக இருக்கிறது.

வாழ்வு என்பது ஒரு ஓட்டப் பந்தயத்துடன் ஒப்பிடப்படுகிற, அடுத்த அதிகாரத்தின் தொடக்கத்தைக் கண்ணோக்குங்கள். ஒரு இடைமாற்று ஓட்டப் பந்தயத்தைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். எபிரெயர் 11ன் விசுவாச வீரர்கள் அந்தப் பந்தயத்தைத் தொடங்கினர். இப்போது விசுவாசம் என்ற கோல் நமக்குக் கையளிக்கப் பட்டுள்ளது. நாம் அதைக் கீழே போட்டுவிடாது இருப்போமாக!

---

குறிப்புகள்

[1]எபிரெயர் 11ல் இரண்டு பெண்கள் மாத்திரமே குறிப்பிடப் படுகின்றனர்.
[2]உங்கள் வகுப்பில் இருப்பவர்களை, பழைய ஏற்பாட்டின் விசுவாச வீரர்களாக இருந்த மற்றவர்களைப் பற்றி சிந்திக்க முடியுமா என்று நீங்கள் கேட்க விரும்பலாம்.